* 241 Q.—THIRU N. KASIRAMAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state:

(a) whether the Government have passed orders fixing the scales and emoluments payable to the staff of the Government Arts and Training Colleges in accordance with the scale recommended by the University Grants Commission;

(b) whether this scale of pay will be applicable even to the teaching staff of the educational department who are for the present working in the professional colleges on deputation; and

(c) the total number of teaching staff of the Arts Colleges and Teachers' Training Colleges working in the professional colleges?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) 211.

DR. H. V. HANDE: The State Government is expecting reply from the Centre. In the meantime, will the Government be prepared, so far as these lecturers are concerned, to issue orders so that these arts and science people working in professional colleges will be given the same facilities as regular professional college lecturers?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: என்னுடைய பதிலிலேயே கடைசி பதிலாக அதைத்தான் சொன்னேன். அவர்கள் உத்தரவை நாம் அமல்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

திரு. டி. மார்டின்: ஸ்பீக்கர் சார், மானியம் பெற்றுவரும் தனியார் துறை கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஒய்வு கால ஊதியம் வழங்கும்பொழுது அவர்கள் ஹைஸ்கூல்களிலே பணியாற்றி இருந்தாலும், அந்தக் காலத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று டைரக்டர் ஆப் காலேஜியட் எஜுகேஷன் கேட்டுள்ளார்கள். அப்படி உத்தரவு பிறப்பிக்காததன் காரணமாக ஏராளமான ஆசிரியர்களின் ஓய்வு கால ஊதியம் நிர்ணயம் செய்யப்படாமல் உள்ளது. எனவே, அரசாங்கம் உடனடியாக அந்த உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தக் கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. எய்டெட் ஸ்கூல்ஸ், கவர்ன்மெண்ட் ஸ்கூல்ஸ் என்று வெவ்வேறு இடத்திலே பணியாற்றினாலும் எடுத்துக் கொள்ளப்படுமா ? கல்லூரிகளிலே பணியாற்றினாலும் எடுத்துக்கொள்ளப் படுமா என்பது போன்ற பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன. அரசாங்கம் அதையெல்லாம் பரிசீலனை செய்து முடிவு எடுக்கும்.

திரு. பெ. மலைச்சாமி: தனியார் பள்ளிகளிலே ஆசிரியர்களுக்குப் பல்கலைக் கழகம் நிர்ணயித்துள்ள சம்பளம் கிடைக்கவில்லை என்பது உண்மையா ? அதுபற்றி அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: குறிப்பிட்டு எந்தக் கல்லூரியில் என்று எழுதியனுப்பினால் பரிசீலிக்கலாம்.

திரு. க. ந. இராமச்சந்திரன்: மாவட்ட மன்றங்களிலே உள்ள உயர்நிலைப் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற பி. டி. ஆசிரியர்களுக்கு பே ஃபிக்ஸேஷன் செய்யப்படுவதில்லை என்று சொல்கிறார்கள். எப்பொழுது அது நிறைவேற்றப்படுமென்று அறிய விரும்புகிறேன்.

REPORTING SECTION

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தத் தகவல் இல்லே. டிஸ்ட்ரிக்ட் போர்டு ஸ்கூல்களேயும் கவர்ன்மெண்ட் ஸ்கூல்களேயும் இண்டக்ரேட் செய்வதிலே கொஞ்சம் பிரச்னேகள் இருக்கின்றன. இருதரப்பாரையும் கலந்தாலோசித்து கல்வி டைரக்டர் அவர்கள் இதுபற்றி ஆராய்ந்து வருகிருர்கள். அவர்களுடைய அறிக்கை வந்தவுடன் பரிசீலனே செய்யப்படும்.

திரு. கே. விஞயகம் : யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் என்ன சிபாரிசு செய்ததோ அதை அரசாங்கம் பல இடங்களிலே அமலுக்குக் கொண்டுவர வில்லே என்ற புகார் வந்திருக்கிறது. டிபார்ட்மென்ட் ஹெட்டுக்குக் கீழே நான்கு அஸிஸ்டெண்ட்கள் இருந்தால் கிரேடு 1 சேலரி கொடுக்கப்படுகிறது. அதேமாதிரி தமிழுக்கு ஊக்கம் தரவேண்டுமென்று சொல்லுகின்றபொழுது ஹெட் ஆப் தி டிபார்டுமெண்ட் தமிழாசிரியராக இருந்தால் அவருக்குக் கீழே நான்கு பேர்கள் இருந்தால்தான் கிரேடு 1 சேலரி கொடுக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஆனுல் மற்றப் பாடங்களிலே பிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி, ஜியாக்ரபி இந்த டிபார்ட்மென்ட் ஹெட்டுக்குக் கீழே இரண்டு பேர்கள் இருந்தால்கூட, அல்லது ஒருவர் இருந்தாலேகூட அம்மாதிரி தரப்படுகிறது. எனவே தமிழுக்கு ஊக்கம் கொடுக்கிற சர்க்கார் ஏன் அதை அமல்படுத்தவில்லே. இனிமேலாவது அதைச் செய்வார்களா ? குறிப்பாக அப்படிப்பட்ட இன்ஸ்டன்ஸ் பிரசிடென்சி காலேஜிலே இருக்கிறது. அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு உறுப்பினர் இப்பொழுதாவது தமிழில் அக்கறை காட்டுவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் சொன்னதை நாம் அப்படியே ஒப்புக் கொண்டோம். ஆனுல் இண்டர்ப்ரடேஷன் ஆப் ரூல்ஸில் ஏதாவது கஷ்டம் இருக்கலாம். அதை இந்த அரசாங்கம் பரிசீலனே செய்யும்.

பெண்கள் தொழிற்பயிற்சி.

*242 விஞ—**திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவிற்கு விடையளிப் பாரா— முற் கல 9–30

பெண்கள் தொழிற் கல்வியைப்பற்றி இந்த அரசு மேற்கொண்டுள்ள திட்டங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இம் மாநிலத்தில் தற்போது பெண் களுக்கான பல தொழிற் பயிற்சிப் பள்ளிகள் (பாலிடெக்னிக்குகள்) மூன்று உள்ளன. மின் இயல், கட்டிடப் பொறியியல், இயந்திரப் பொறியியல், வாணிபம் குறித்த பயிற்சி, ஆடை வடிவமைப்பு துறை, ஆடைகள் தயாரித் தல், ஆகியவற்றில் "டிப்ளோமா" அளவில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தற்போதுள்ள பெண்கள் பாலி டெக்னிக்குகள் மூன்றில் புதிய பயிற்சிகளேச் சேர்த்துப் பயிற்சிகளேப் பல தரப்பட்டவையாக்கக் கருதியுள்ளது.

திருமதி வி.ப. பழனியம்மாள் : அப்படி புதிய பயிற்சிப் பள்ளிகள் ஆரம்பிக்கப்படும்போது கோவை மாவட்டத்தில் ஒரு பள்ளி ஆரம்பிக்கப் படுமா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : கோவை மாவட்டம் மிகுந்த அளவு முன்னேறியுள்ள மாவட்டம். தொழிற் கல்லூரியிலே, அவர்கள்தான் தலேசிறந்து விளங்குகிருர்கள்.

திரு கே. போஜன் : அமைச்சர் அவர்களுடைய பதிலில் பெண்கள் தொழிற் பயிற்சிக் கல்லூரிகள் ஏற்கனவே சென்னே மாநிலத்தில் மூன்று இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். அவை எந்தெந்த மாவட்டங் களில் இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சென்னே, மதுரை, கோயம்புத்தூர்